பக்கங்கள் 16

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 24 திங்கட்கிழமை 11.12.2023 அதிர்வு 133

**உ**ரலார் **கேள்வி**யும் **உ**லக்கையார் **பதிலு**ம்

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

சனியன்று பிரசுரமாகியிருக்க வேண்டிய கம்பவாரியியின் கேள்வி - பதில் நாளை காலை முரசில்!



## தமிழர் தாயகத்தில்

# சுற்றுலா விருத்தி என்ற போர்வையில் மதுபான நிலையங்களை அமைக்காதீர்!

### அரசின் சதி நடவடிக்கைக்கு எதிராக சுகிர்தன் கடும் கண்டனம்



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

"தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் சுற்றுலா விருத்தி என்ற போர்வையில் மதுபான விற்பனை நிலையங்களை அரசு ஊக்குவிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது."

- இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி மீளவும் மதுபானசாலைக்கு அனுமதி வழுங்கப்பட்டதற்கு எதிராக யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

04▶

# மனித உரிமை மீறல்களை எதிர்த்து யாழில் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு மாகாண பெண்கள் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் மீறல்களை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு மகஜரையும் போராட்டக்காரர்கள் கையளித்தனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையில் மனித 04▶




# மன்னாரிலும் போராட்டம்



(மன்னார் நிருபர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஜார் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம்

04▶

# மாவா போதைப் பாக்குடன் யாழ். நகரில் ஒருவர் கைது



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகரில் பெருமளவான மாவா போதைப்பொருளுடன் ஒருவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்காகக் கொண்டு சந்தேகநபர் போதைப் பாக்கு விற்பனையில் ஈடுபட்ட போது யாழ்ப்பாணம் பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு யாழ்.

04▶

# கொழும்பில் முக்கிய பிரமுகர்களை சந்தித்த உலகத் தமிழர் பேரவையினர்

உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் குழுவினர் கொழும்பில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஜி.எல்.பீரிஸ், லக்ஸ்மன் கிரியெல்ல, எம்.ஏ.சுமந்திரன், ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் உள்ளிட்ட எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், தெற்கு சிவில் சமூகத்தினர் ஆகியோரைச் சந்தித்து இலங்கையில் இன நல்லிணக்கத்துக்கான 'இமயமலைப் பிரகடனம்' வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தினர்.









# 22 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான சட்ட விரோத சிகரெட்டுகள் கட்டுநாயக்காவில்!

## சந்தேகத்தில் வர்த்தகர் கைது

(ரஸீன் ரஸ்மின்)

சட்டவிரோதமான முறையில் வர்த்தகர் ஒருவரால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட சுமார் 22 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளி நாட்டு சிகரெட்டுகளை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் குழுவினர் இன்று (11) அதிகாலை மீட்டுள்ளனர்.

கம்பளை, புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய வர்த்தகர் ஒருவர் இதன்போது சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விமான நிலையத்தில் அனைத்துச் சோதனைகளையும் முடித்துக் கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேறிய போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அடிக்கடி வெளிநாட்டு பயணத்தை மேற் கொண்டு வருபவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.



டுபாயில் இருந்து ஓமன், மஸ்கட் நகருக்கு வந்த அவர், இன்று (11) அதி காலை 03.30 மணியளவில் சலாம் எயார் விமானம் ஓவி-437 மூலம் கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்த டைந்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொண்டு வந்த இரண்டு பயணப் பொதிகளில் 22,800 "மென்செஸ்டர்" வகையைச் சேர்ந்த வெளிநாட்டுச் சிக ரெட்டுகள் அடங்கிய 114 சிகரெட் அட்டை களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கட்டு நாயக்க விமான நிலைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நயினாதீவுக்குத் தேசிய மின்சார விநியோகம்; இணைப்பு வழங்கச் சிபார்சுக்கு விண்ணப்பம்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் நயினாதீவுக்குத் தேசிய மின்சார விநியோகத்தை மேற்கொள்ளும் வகையில் மின் இணைப்பு வழங்குவதற்கான சிபார் சுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் வரையில் தற்போது உள்ள மின்சாரத்தை இலங்கை மின் சார சபையின் 184 மில்லியன் ரூபா செலவில் நயினாதீவு வரையில் கடலின் நடுவே மின் கோபுரங்கள் அமைத்து மின் இணைப்பை கொண்டு செல்வ தற்காக திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான திட்ட வரைபுகளும் தயார் செய்யப்பட்டு செலவு மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் அடுத்த படியாக இந்தத் திட்டத்தைநடைமுறைப்படுத்துவதற்காகக் கரையோரபாதுகாப்பு பிரிவு, கடற்படை, மீன்பிடித் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், கடல்வள ஆய்வு நிறுவனம் என 10 நிறுவனங்களின் ஒப்புதலுக்காகக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒப்புதலுக்காகக் கடிதம் அனுப்பப்பட்ட 10 நிறுவனங்களில் 5 நிறுவனங்கள் தமது ஒப்புதலை இலங்கை மின்சார சபைக்கு வழங்கி விட்டன. மேலும் 5 நிறுவனங்கள் தமது ஒப்புதலை வழங்கும் பட்சத்தில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னர் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்க இருக்கும் இந்தத் திட்டத்தை 2025 ஆம் ஆண்டில் நிறைவு செய் யும் வகையில் திட்டமிடப்படுகிறது என்று இலங்கை மின்சாரசபை தெரி வித்துள்ளது.

# அட்டாளைச்சேனையில் குடிசன மதிப்பீடு

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற புள்ளி விவர திணைக்களத்தின் குடிசன தொகை மதிப்பீட்டு தரவேற்றல் செயல்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வு அட்டாளைச் சேனை பிரதேச செயலர் எம் ஏ சி. அக மது ஷாபிர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புள்ளி விவரத் திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் இந்திக்க விஜயகோன், தலைமை அலு வலக சிரேஷ்ட புள்ளி விவர அதிகாரி திருமதி அச்சலா, தலைமை அலுவ லக சிரேஷ்ட புள்ளி விவர அதிகாரி நிஷாந்த, மாவட்ட மேற்பார்வையாளர்



ஏ ஏல். முன்ஸீப், பிரதேச செயலக புள்ளி விவர உத்தியோகத்தர் ஜேஎம்.இர்பான், சமுர்த்தி முகாமையாளர் ஏ எம். ஹமீட், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ எல். மஜீட், நிர்வாக கிராம உத்தியோகத்தர் ஏ எல். ஜௌபர் மற்றும் நிரற்படுத்தல் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மாவா போதை...**

பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலடியில் உள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றின்

அருகிலேயே 33 வயதான மேற்படி சந்தேகநபர் மாவா போதைப்பொருளை விற்பனைக்காக வைத்திருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 3 கிலோ 686 கிராம் நிறை கொண்ட மாவா போதைப்பொருள் சிறிய சிறிய பைகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் விசாரணைகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

**மன்னாரிலும்...**

முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டபாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் அருந்தவநாதன் நிரோஜன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புகள், பெண்கள் அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்தனர்.

**சுற்றுலா விருத்தி...**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உடுப்பிட்டியில் மக்கள் செறிவுள்ள பகுதியில் சில மாதங்களுக்கு முன் மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டது. இதற்கு எதிராக மக்கள் பெருமளவில் போராட்டம் செய்தபோது பொதுமக்களின் எதிர்ப்பைக் கருத்தில் கொண்டு மதுபான விற்பனை நிலையத்தின் அனுமதி தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டு மூடப்பட்டது. ஆனால், தற்போது சில நாட்களாக மதுபான விற்பனை நிலையம் திறக்கப்பட்டு வியாபாரம் இடம்பெறுகின்றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இமையாணன் இ.த.க பாடசாலை, நவிண்டில் தாமோதரா பாடசாலை என்பன குறித்த மதுபானசாலைக்கு மிகக் குறைந்த தூரத்திலேயே இருக்கின்றது.

இது தொடர்பாக கரவெட்டி பிரதேச செயலாளரைப் பொது அமைப்புகள் தொடர்பு கொண்டபோது நேரடியாகவும் வாய்மொழி மூலமாகவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தனக்கு அறிவுறுத்தியதனால்தான் இடத்துக்கான சிபார்சை வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரைச் சந்தித்து கலந்துரையாடி மகஜரைக் கையளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆறு வருடங்களுக்கு முன்னரும் மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு பல சமூக சீரழிவுகள் ஏற்பட்டதால் பொதுமக்கள் போராட்டம் செய்து மதுபான விற்பனை நிலையம் அகற்றப்பட்டது. இரண்டாம் தடவையாக கொண்டுவர முயற்சித்தும் அது முடியாத நிலையில் மூன்றாவது தடவையாக திறக்கப்பட்ட மதுபான நிலையம்

பொதுமக்களின் எதிர்ப்பால் மூடப்பட்ட போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அதில் தலையிட்டு அதைத் திறந்து வைக்க உத்தரவிட்டார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரது சந்திப்பில் சாதகமான முடிவு கிடைக்குமென பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கருதுகின்றனர்.

இது புதிய மதுபானசாலை அல்ல. கடந்த காலங்களில் நெல்லியடியில் இயங்கிய மதுபான விற்பனை நிலையமே இங்கு இடமாற்றப்பட்டுள்ளது. ஆகவே, அது பழைய இடத்திலேயே இயங்குவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால், இந்த இடத்தில் இருந்து மதுபான விற்பனை நிலையம் அகற்றப்பட வேண்டும். இதற்கு அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் சுற்றுலாவை விருத்தி செய்ய வேண்டுமானால் சுற்றுலா மையங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மதுபானத்தைக் காட்டி எங்கள் பிரதேசங்களுக்குச் சுற்றுலாப் பயணிகளைக் கொண்டுவர வேண்டிய தேவை இல்லை.”

– என்றார்.

**மனித உரிமை...**

உரிமை பாதுகாப்பு இல்லை. இந்தப் பிரச்சினையை இங்கு வாழ்கின்ற மக்கள் என்ற ரீதியில் தொடர்ச்சியாக நாங்கள் எதிர்நோக்கி வருகின்றோம். குறிப்பாக நீரியல் வளங்கள், நில வளங்கள், சுற்றாடல் போன்ற வளப் பகிர்வுகளில் அரசு மற்றும் மக்களுக்கு இடையிலே உள்ள சமூக ஒப்பந்தம் மீறப்படுவதுடன் அதன் மூலம் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன.

அதிலும் வட பகுதியில் தேசிய பாதுகாப்பு என்ற ரீதியில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமை மற்றும் காணி அபகரிப்பு, இராணுவமயமாக்கல், இராணுவச் சோதனை தடுப்பு அரண்கள், மக்கள் மீள்குடியேற்றப்படாமை போன்றவற்றால் இங்கு வாழ்கின்ற மக்களாகிய நாம் பெரும் சவால்களை எதிர்நோக்கின்றோம்.

தற்காலத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருட்களின் விலை அதிகரிப்பு, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை, இந்திய இழுவை மடி எமது கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுகின்றமை, பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரம், போதைப்பொருள் பாவனை, சமுர்த்தி கொடுப்பனவுகள் சரியான முறையில் கிடைக்கப்பெறாமை போன்ற சவால்களையும் மக்களாகிய நாம் எதிர்நோக்குவதுடன் நாட்டின் பொருளாதாரக் கொள்கை, நாட்டின் புதிய சட்டம் மற்றும் சட்டமூலங்கள், சர்தேச உடன்படிக்கைகள் மூலம் வட பகுதி மக்களாகிய நாம் பல இன்னல்களை எதிர்நோக்கின்றோம்.

அதிலும் நாட்டின் முதலீட்டை அதிகரித்தல் என்ற ரீதியில் மக்களின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படாமல் மக்களின் எதிர்ப்பையும் மீறி சில திட்டங்கள் நடைபெறுகின்றன.

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின்சார உற்பத்தி, விடத்தல்தீவு இறால் பண்ணை, கனிய மண் அகழ்வு, கிளிநொச்சி மாவட்டத்தில் கடல் அட்டைப் பண்ணை, பொன்னாவெளி கிராம டோக்கியோ, சீமெந்து தொழிற்சாலைத் திட்டம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மயிலிட்டித் துறைமுக அபிவிருத்தி என்பன இடம்பெறுகின்றன. நாட்டின் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கின்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட குருந்தூர் மலை விவகாரம், திட்டமிட்ட மாகாவலி குடியேற்றங்கள், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தையிட்டி திஸ்ஸ விகாரை போன்ற பல்வேறு பிரச்சனைகளை வடக்கு மாகாண பெண்கள் என்ற ரீதியில் எதிர்நோக்குகின்றோம்.

ஆகவே, வடக்கு மாகாண பெண்கள் குரல் என்ற ரீதியில் மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதனுடன் மனித உரிமைகள் பாதுகாக்க வேண்டும் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள்.”

– என்றுள்ளது.





# பண்பாட்டைத் தொலைப்பதற்கு ஆயத்தமாக இருக்கும் தமிழர்!

## கவலை தெரிவிக்கிறார் ஆறு திருமுருகன்

(ந.லோகதயாளன்)

இஸ்லாமியர்கள் தமது பண்பாட்டைக் காப்பாற்றுகின்றனர், பௌத்தர்கள் தமது பண்பாட்டிலே மிக அக்கறையாக இருக்கின்றனர். ஆனால் எத்தனையோ உயிர்களை இழந்த தமிழர்கள்தான் தமிழர் பண்பாட்டை தொலைப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர் என்று ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

தமிழி வழங்கும் தமிழ் வேள்வி நிகழ்வு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஆசியுரை வழங்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்துள்ளவை வருமாறு,

எந்தவொரு அமைப்பை உருவாக்கினாலும் அதன் ஆயுள் பலத்தை அதைச் சார்ந்தவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். தமிழுக்குப் பல அமைப்புகள் உருவாகுவதும் பின்னர் மருகிப் போவதும் வழக்கமாகிவிட்டது. அந்தச் சூழ்நிலை மாற வேண்டும். தமிழ் வேள்வி அதற்கும் உதவ வேண்டும்.

தமிழ் மன்னர்களின் செய்திகளையே கூறப் பயன்பட்ட முரசு பயன்பாட்டில் இல்லை. தற்போது மேலைத்தேய வாத்தியம் போன்று பழக்கத்துக்கு வந்துள்ளது. எமது முரசு எமது பாரம்பரியமான கருவி அது அருகிப் போகின்றது.

தற்போது இன்னிசைத் தமிழ்விழா, பாடசாலை நிகழ்வுகள் என்று இறுதி நிகழ்வு வரையில் வந்துவிட்டது.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் பண்பாட்டு அக்கடமி, இந்து நாகரீகத் துறை, தமிழ்த் துறை, இந்துத் துறை என்பன இருந்தும் இந்த தமிழர் பண்பாட்டை யார் காப்பாற்றுகின்றனர்.

தற்போது பலகலைக் கழகத்தில் விரிவுரையாளர்களையும் அடையாளம் தெரியவில்லை, பணியாளரையும் அடையாளம் தெரியவில்லை, மாணவர்களையும் அடையாளம் தெரியவில்லை.

இதனைப் பழிப்பதற்காக நான் கூறவில்லை. பண்பாட்டை இழந்து கொண்டிருக்கின்றோம். இஸ்லாமியர்கள் தமது பண்பாட்டைக் காப்பாற்றுகின்றனர். பௌத்தர்கள் தமது பண்பாட்டில் மிக அக்கறையாக இருக்கின்றனர். ஆனால் எத்தனையோ உயிர்களை இழந்த தமிழர்கள்தான் தமிழர் பண்பாட்டைத் தொலைப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர்.

இந்தியாவிலே சீக்கிய இனம் இராணுவத்தில்கூட தலைப்பாகையுடன் தான் பணியாற்றுகின்றது. முதலாவது சீக்கிய துடுப்பாட்ட அணியில்கூட தமது பண்பாட்டை விட்டுக்கொடுக்கவில்லை.

இவ்வாறான நிலையில் எத்தனையோ ஆயிரம் ஆண்டு காலத் தமிழர்கள் பழமையும் பெருமையும் பேசும் தமிழர்கள் எதையும் எந்த நேரமும் கைவிடத் தயாராக இருக்கின்றனர். இது கவலையளிக்கின்றது. அதற்குச் சினிமா மோகம், சினிமாச் சூழல், சினிமா நிகழ்வும் காரணமாக அமைகின்றது. இவை எமக்கு கவலையளிக்கின்றது.– என்றார்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## உலகம் இன்னுமா நம்புகின்றது?

வடிவேலுவின் ஒரு நகைச்சுவைப் படம். அந்தப் படத்தில் அவருக்கு 'கைப்புள்ள' பாத்திரம். வாய்ச் சவடால் பண்ணி, அதனால் அடி வாங்கி, உடைகள் எல்லாம் கிழிந்து தொங்க, அடி காயங்களுடன் வருவார் கைப்புள்ள. அப்போது எதிர்ப்படும் இருவர் கைப்புள்ளயை ஏத்தி விடுவது போல ஒருவர் இன்னொருவரிடம் கேட்பார்.

''அடி கொடுத்த கைப்புள்ளேக்கே இவ்வளவு காயம் எண்டால் அடி வாங்கியவன் உயிரோடுதான் இருப்பான் என்று நம்புறீங்களா?'' - என்பார்.

அதைக் கேட்டுக் கடுப்பாகும் கைப்புள்ள, ''இன்னுமா இந்த உலகம் நம்மள நம்புது?'' என்று ஆச்சரியத் தொனியில் தன் சகாவிடம் கேட்பார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தமது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பிய பின்னர் தெரிவித்த கருத்து இப்படி உலகம் இன்னுமா நம்புகின்றது என்ற சந்தேகத்தை எழுப்பும் விவகாரமாக அமைந்துள்ளது.

டெல்லியில் நடைபெற்ற இந்திய மத்திய அரசின் அதிகாரிகள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளுடனான சந்திப்புக்களின் போது, இந்தியா தமிழர்களை ஒருபோதும் கைவிடாது என்ற இறுக்கமான நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என அவர் கூறியிருக்கிறார்.

''அங்கு நடைபெற்ற சந்திப்புக்களின் போதும், கலந்துரையாடல்களின் போதும், உரையாற்றுவதற்கு கிடைத்த தளங்களிலும் எமது நிலைப்பாடுகளையும் எமது மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளையும் மிகத் தெளிவாக எடுத்துரைத்தேன். எமக்கும் மத்திய அரசாங்கத்தின் முக்கிய அதிகாரிகள் மற்றும் புத்திஜீவிகளுடன் நடைபெற்ற சந்திப்புகள் மிகவும் முக்கியமானவை. எனினும் அவர்களின் பெயர்களை நான் வெளிப்படுத்த விரும்பவில்லை. ஆனால் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட முக்கிய தலைவர்களுக்கு நம்மால் சொல்லப்பட வேண்டிய செய்தியை அவர்களிடம் பகிர்ந்து கொண்டுள்ளேன். இலங்கைத் தமிழர்களை இந்தியா எப்போதும் கைவிடாது என்ற உறுதிப்பாட்டை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அத்தோடு இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் அதிகமான கவனத்தை அவர்கள் கொண்டிருக்கின்றமையோடு, அந்த விடயத்தில் வடக்கு - கிழக்கு தமிழர்களின் வகிபாகம் முக்கியமானது என்று அவர்கள் தெரிவித்தனர்.''- இப்படி விக்னேஸ்வரன் கூறியிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் ஏனையோரும் ஒப்பமிட்டு, இந்தியத் தூதுவருடாக பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதம் இந்தியப் பிரதமரைச் சென்றடையவில்லை என்று சற்று காலத்துக்கு முன்னர் குறிப்பிட்டவர் விக்னேஸ்வரன்.

இப்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட முக்கிய தலைவர்களுக்கு தங்களால் சொல்லப்பட வேண்டிய செய்தியை மத்திய அரசாங்கத்தின் முக்கிய அதிகாரிகள் மற்றும் புத்திஜீவிகள் ஊடாக தாம் பகிர்ந்து கொண்டுள்ளார் என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் கருத்துப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் ஊடாக இந்தியப் பிரதமருக்கு சம்பந்தனும் ஏனையோரும் அனுப்பிய கடிதம் இந்தியப் பிரதமரை அடையாத நிலையில், இப்போது அவர் குறிப்பிடும் தரப்புகளூடாக அவர் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் இந்தியப் பிரதமரை நிச்சயம் எட்டும் என்று நம்புவோமாக!

இந்தியா தன்னுடைய தேசியப் பாதுகாப்பில் அதிக கவனம் கொண்டிருக்கின்றது என்றும், அந்த விடயத்தில் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் வகிபாகம் முக்கியமானது எனக் கருதுகிறது என்றும் அவர் குறிப்பிடுவது முற்றிலும் சரியே.

தன்னுடைய தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய அரசியல் நலன் சம்பந்தப்பட்ட விவகாரத்துக்கு மட்டுமே கடந்த அரை நூற்றாண்டாக வடக்குக் கிழக்கு தமிழர்களின் விடயத்தை இந்தியா கையாளுகின்றது என்பது தமது கடைசிக் காலத்தில் அரசியலுக்கு வந்து, இப்போது அதில் பத்து வருடங்கள் அனுபவம் பெற்றுவிட்ட நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு இன்னும் விளங்காமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியதுதான்.

இவ்வளவும் நடந்து முடிந்த பின்னரும், ஈழத் தமிழர்கள் நட்டாற்றில் விடப்பட்டுள்ள நிலையிலும், இப்போதும் இந்தியா தமிழர்களை ஒருபோதும் கைவிடாது என்ற இறுக்கமான நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன என்று கூறி, அவற்றை அவர் இன்னும் - இப்போதும் - நம்புகிறார்.

இதை நோக்கும் போது கைப்புள்ள கேட்ட கேள்விதான் நினைவுக்கு வருகிறது. உலகம் இன்னுமா ஈழத் தமிழர்களை இந்தியா எப்போதும் கைவிடாது என்று நம்பிக் கொண்டிருக்கின்றது?

## வலுவிழந்தோருக்குச் சக்கர நாற்காலிகள்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

உடல் வலுவிழந்த பயனாளிகளுக்கு சக்கரநாற்காலிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலர் எஸ்.ஜெகராஜன் வழிகாட்டலிலும் உதவி பிரதேச செயலரின் ஒத்துழைப்புடனும் சக்கர நாற்காலி தேவைப்பாடுடைய மூன்று பயனாளிகளுக்கு மாவட்ட மட்ட சமூக சேவை உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து பயனாளிகளுக்குச் சக்கர நாற்காலிகளை வழங்கினர்.



# விவசாயிகளுக்கான மின் கட்டண அறவீட்டில் திருத்தம் செய்து விவசாயிகளை ஊக்குவிக்குக!

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. வேண்டுகோள்

(த.சுபேசன்)

விவசாயிகளுக்கான மின் கட்டண அறவீட்டில் திருத்தத்தை மேற்கொண்டு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மனித உடலில் குருதி மற்றும் இதயம் ஆகியன எவ்வளவு முக்கியமோ அந்த ளவுக்கு ஒரு நாட்டுக்கு விவசாயத்துறை முக்கியமானது.

விவசாயிகளுடைய உழைப்பில் தான் இந்த நாடு ஸ்திரமடைந்துள்ளது. உணவுத் தேவையும் பூர்த்தி செய்யப்படுகின்றது. விவசாயிகளுக்கு உரம் கிடைக்காமையால்தான் 2022 ஆம் ஆண்டு விவசாய துறை நெருக்கடியைச் சந்தித்தது. அதனூடாகப் பாரிய பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டிருந்தது.

பொருளாதார நெருக்கடியின் பின்னர் தற்போதைய விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அமைச்சுப் பதவியை ஏற்று விவசாயிகளின் பல பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருந்தார். விவசாயிகளை முன்னேற்றுவதற்கான



வழிமுறைகளைச் செய்து வருகிறார்.

யாழ். மாவட்ட விவசாயிகள் நிலத்தடி மற்றும் மழை நீரை நம்பி விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் நீரைப் பெற மின்சார மோட்டர் மற்றும் எரிபொருள் மூலம் இயங்கக் கூடிய நீர் பம்பிகளை பயன்படுத்துகின்றனர். பொருளாதார நெருக்கடியின் பின்னர் எரிபொருள் விலை மூன்று மடங்கு அதிகரித்து எரிபொருள் மூலம் இயங்குகின்ற நீர்ப் பம்பி பாவனை சாத்தியமில்லாத நிலையில் காணப்படுகிறது.

மின் கட்டண அறவீட்டிலும் அநியாயம் இடம்பெறுகிறது. இது வடக்கில் மாத்திரமல்ல நாடு முழுவதிலும் காணப்படுகிறது. இது தொடர்பாக விவசாய அமைச்சர் யாழ்ப்பாணம் வந்த போது சுட்டிக்காட்டியிருந்தேன். விவசாயிகள் நாட்டின் பொருளாதாரத்தையும் - உணவுப் பாதுகாப்பையும் பேணி வருகிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கான அடிப்படை மின் கட்டண அறவீடு பொருளாதார நெருக்கடியின் பின்னர் 1600 ரூபா வரை அதிகரித்து தற்போது 1120 ரூபாவாக அறவிடப்படுகிறது.

விவசாயிகளுக்கு மிக அதிகரித்த மின் கட்டணம் அறவிடப்படுகிறது. ஆனால் ஏனைய துறைகளுக்கு அவ்வாறான அதிகரித்த மின் கட்டண அறவீடு இல்லை. எந்தத் துறை நாட்டைக் காப்பாற்றுகிறது என்று சிந்திக்க வேண்டும். மின் அலகு ஒன்றுக்கான கட்டணம் கூட ஹோட்டல் துறைக்கு 20ரூபாவாகவும், விவசாய துறைக்கு 38ரூபாவாகவும் காணப்படுகின்றது.

இது எந்த விதத்தில் நியாயமானது? அமைச்சரவை பத்திரம் ஊடாக விவசாய துறைக்கான அதிகரித்த மின் கட்டண அறவீட்டை மாற்றித் தருவதாக விவசாய அமைச்சர் உத்தரவாதம் தந்துள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் நெற் பயிற்செய்கையில் ஈடுபடுபவர்களை விட மேட்டு நிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள் அதிகம். ஆனால் நெற் செய்கையாளர்களுக்குக் கிடைக்கும் ஊக்குவிப்புக்கள் போன்று மேட்டு நில பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்புகள் கிடைப்பதில்லை. மரக்கறிமற்றும்பழச்செய்கையாளர்களுக்கும் இவ்வாறான ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.- என்றார்.

# சீனா - இலங்கை பட்டுப்பாதைத் திட்டம்; மக்களுக்குத் தெளிவுபடுத்தும் சந்திப்பு!

(எம்.எம்.றம்ஸீன்)

சீனா இலங்கை பட்டுப் பாதைத் திட்டத்தின் ஊடாக இலங்கை அரசு அடைந்து கொண்ட நன்மைகள் மற்றும் இதன் விளைவுகள் என்ன என்பது தொடர்பான மாபெரும் கலந்துரையாடல் கல்முனை எஸ்.எல்.ஆர். விடுதி மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆசிய முன்னேற்றப் பேரவை ஏற்பாட்டாளர் மஹ்மூத் மாஜித் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர எல்லைக்கு உட்பட்ட அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த சர்வதேச மதங்களையும் சேர்ந்த இளம் கல்வியாளர்கள் , சமூக சேவையாளர்கள் , அரசியல்வாதிகள் கழகங்களின் உறுப்பினர்கள் மற்றும் சமூக சேவை அமைப்புகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சீனாவினுடைய பட்டுப்பாதைத் திட்டத்தின் ஊடாக இலங்கை பெற்றுக் கொண்ட திட்டங்கள், அவை எவ்வாறு பயன்படுகிறது, இலங்கை பெற்றுக் கொண்ட கடன்களின் தொகை, சீனாவிலிருந்து இருந்து பெற்றுக் கொண்ட கடன்களின் தொகை, தனி நபர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட தொகை, ஏனைய நாடுகளிடம் இருந்து பெற்றுக் கொண்ட தொகை போன்ற முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.


அவர்களது திட்டங்கள் எவ்வாறு அமைய வேண்டும், அந்தத் திட்டங்கள் தற்போது எவ்வாறு அமைந்திருக்கின்றது, அதன் வெற்றி பாதை எப்படி அமைய வேண்டும், ஒரு நாட்டின் முன்னேற்றம் எப்படி அமைய வேண்டும், ஒரு நாட்டை முன்னேற்றுவது எவ்வாறு என்பது தொடர்பான பல விடயங்கள் ஆராயப்பட்டன.

தொழினுட்பம், கல்வி, விவசாயம், சுகாதாரம் சார்ந்த அனைத்துத் துறைகளையும் உள்வாங்கியதாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.



# ‘பாலஸ்தீனம் எரியும் தேசம்’ நூல் வெளியிடப்பட்டுள்ளது

பாலஸ்தீன மக்கள் மிகவும் நெருக்கடியான காலத்தில் இனப்படுகொலை ஒன்றுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். உலக நாடுகள் வெறுமனே கண்டிப்பதுடன் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர். இவ்வாறான ஒரு சூழலில் ஒடுக்கப்படுகின்ற, நிலங்களைப் பறி கொடுத்த, இனப்படுகொலையை எதிர் கொண்ட தமிழ் இனமாக பலஸ்தீன மக்களுடன் உணர்வுத் தோழமையுடன் தோள் கொடுத்து நிற்க வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உள்ளது.




இந்த நோக்கத்தில் ஐங்கரன் விக்கினேஸ்வரா, பாலஸ்தீன மக்கள் எதிர்நோக்கிய, நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக ‘பாலஸ்தீனம் எரியும் தேசம்’ என்ற தலைப்பில் நூல் வெளியிடப்பட்டுள்ளது என்று இந்நூலின் முன்னுரையில் கனடா எழுத்தாளர் மீரா பாரதி குறிப்பிட்டுள்ளார்.

“ஜீவநதி” வெளியீட்டகத்தால் இது வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலில் நிகழ்கால பாலஸ்தீன போர்க்கள நிகழ்வுகளின் ஆய்வுக் கட்டுரைகள் பல வெளியாகியுள்ளன.

நூறாண்டுகளாகத் தொடரும் துயரத்தை சுமந்த எரிகின்ற பாலஸ்தீன தேசம் பற்றிய வரலாற்றுப் பார்வையில் கட்டுரைகள் இந்த நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஜீவநதி வெளியீட்டகத்தின் 299 ஆவது வெளியீடாக “பாலஸ்தீனம் எரியும் தேசம்” எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியாகி உள்ளது.

இன்று பாலஸ்தீனம் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு பல துண்டுகளாக்கப்பட்டுச் சிதறடிக்கப்பட்டுள்ளது. சர்வதேசமும் இவர்களைக் கைவிட்டுள்ளது. இந்த மக்களின் விடுதலைக்காகப் போராடிய பாலஸ்தீன விடுதலை இயக்கம் அதிகாரத்தை வைத்திருந்த போதும் தமக்குள் ஊழல்கள் செய்து பலம் குன்றிப் போயுள்ளது.

இந்த நிலையில் அதிதீவிர நிலைப்பாடுடைய ஹமாஸ் போன்ற இயக்கங்கள் எழுச்சி பெற்றுள்ளன. பாலஸ்தீன மக்களின் ஆதரவையும் பெற்றுள்ளன. இவர்கள் தேர்தலில் பங்குபற்றி மக்களால் தெரிவு செய்யப்பட்டு காசா பகுதியில் தம் ஆட்சியை நடாத்துகின்றார்கள் என இந்த நூலின் முன்னுரையில் மீரா பாரதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகவும், பாலஸ்தீனத்தில் பாலஸ்தீன மக்களுக்கு எதிராகவும் நில ஆக்கிரமிப்பு செயற்பாடுகள் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் நடைபெற்றுள்ளன. ஐங்கரன் விக்கினேஸ்வரா இதனை ஒப்பிட்டு ஆண்டு வரிசையில் தரவுகளுடன் விளக்குகின்றார்.

எவ்வாறு நிலங்கள் துண்டாடப்பட்டன, எவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டன, மக்கள் மீது எவ்வாறு போர் திணிக்கப்பட்டது. வன்முறைகளும் இடப்பெயர்வுகளும் காலனித்துவ நாடுகளின் சதிகளும் துரோகங்களும் அவர்களின் இரட்டை நிலைப்பாடுகளும், பிராந்திய முரண்பாடுகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த இந்த முரண்பாடுகளை ஊக்குவிப்பது ஆதரிப்பது, ஊடகங்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது தடை செய்வது, ஊடகர்களை படுகொலை செய்வது, பொய்யான தவறான செய்திகளை வெளியிட்டு மக்களை திசை மாற்றுவது, ஏமாற்றுவது, சர்வதேச உறவுகளில் ஏற்படும் மாற்றங்களும் இதனால் இந்த மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளும், ஒரு பக்கம் அமெரிக்காவும் மேற்குலகமும் மறு பக்கம் சீனாவும் ரஷ்சியாவும் இடையில் இந்தியா போன்ற நாடுகளின் தடுமாற்றங்களும் தவறான முடிவுகளும், ஐக்கிய நாடுகளின் சபையின் இயலாமை எனப் பல பொதுத் தன்மைகளை குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

ஈழத்து இலக்கிய உலகில் நீண்ட காலம் அறிமுகமான ஐங்கரன் விக்கினேஸ்வரா நீண்ட காலமாகச் சர்வதேச அரசியல் விவகார ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவருபவர்.

சார்ள்ஸ், நவீனன் எனும் புனைபெயர்களாலும் அறியப்பட்ட இவரது படைப்புகள் பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளன.

ஈழத் தமிழர்கள் பாலஸ்தீன மக்கள் மீதான ஒடுக்குமுறையை புரிந்து கொள்ளப் பங்களிக்கின்றார். இந்தப் புரிதலானது பாலஸ்தீன மக்களுடன் உணர்வுத் தோழமையுடன் ஒன்றுபட்டு செயற்படுவதற்கான விழிப்புணர்வை ஈழத்தமிழர்களுக்கு வழங்கும் என்று நம்புகின்றேன். இரண்டு தேசத்தவர்களும் தமக்கு ஏற்பட்ட (வரலாற்று) அனுபவங்களிலிருந்து கற்று பரஸ்பரம் பகிர்ந்து ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாக இருந்து செயற்பட வேண்டும். இதற்கு ஆழமான புரிதலும் நீண்டா கால தெளிவான நோக்கமும் இருக்க வேண்டும் என்றும் இந்த நூலின் முன்னுரையில் மீரா பாரதி தெரிவித்துள்ளார்.

ஒடுக்கப்பட்ட மக்களாகிய ஈழத் தமிழர்கள் என்றும் ஒடுக்கப்பட்ட மக்களுடன் தம்மை அடையாளப்படுத்துவதே சிறந்த வழிமுறையும் அறமுமாகும். தற்போது வெளியாகியுள்ள ‘பாலஸ்தீனம் எரியும் தேசம்’ கட்டுரைத் தொகுப்பு நூலானது பாலஸ்தீன மக்கள் மிகவும் நெருக்கடியான காலத்தில் இனப்படுகொலை ஒன்றுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் காலத்தில் வெளியாகியது குறிப்பிடத்தக்கது.



# காத்தான்குடி ஹிழுயாவில் முப்பெரும் கண்காட்சி

**(எம்.எம்.றம்ஸீன்)**

காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள காத்தான்குடி ஹிழுயா வித்தியாலயத்தில் முப்பெரும் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது.

தரம் 6 மற்றும் தரம் 8 வகுப்பு மாணவர்களால் இந்தக் கண்காட்சி தயார் படுத்தப்பட்டிருந்தது.

மாதிரியான சாக் நாடுகளின் மாநாடு, மாதிரி கோள் மண்டளம், கழிவுப் பொருள்களைக் கொண்டு மீள் சுழற்சி செய்யப்பட்ட பொருள்கள் ஆகிய மூன்று கண்காட்சிகள் இதன்போது இடம்பெற்றன.

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் அப்துல் அமீர் இந்த கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலை அதிபர் எஸ்.ஐ.யசீர் அரபாத் தலைமையில் நடைபெற்ற இந்த முப்பெரும் கண்காட்சி நிகழ்வில் காத்தான்குடி கோட்டக் கல்விப் பணிப் பாளர் ஏ .ஜி. எம் ஹக்கீம் உட்பட கல்வி அதிகாரிகள் பாடசாலை அதிபர், ஆசிரி யர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர்.





# மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு நாவிதன்வெளியில்

**(வி.ரி. சகாதேவராஜா)**

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி பிரதேச வீரத்திடல் அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தின் முதல் மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சிறப்புப் பார்வையாளர்களாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா, வலய மாணவர் நாடாளுமன்ற இணைப் பாளரும் உதவிக் கல்விப் பணிப் பாளருமான எச். நைரூஸ்கான் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



முறையான நாடாளுமன்ற அமர்வு போன்று மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு முறைப்படி செங்கோல் சபாநாயகர் பிரசன்னத்துடன் நடைபெற்றது.







# பாடசாலைகளில் ஆபத்தான கட்டடங்களை அகற்றுவதற்கு வேலைத் திட்டம் தயாரிப்பு

கம்பஹா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் உள்ள அபாயகரமான கட்டடங்கள் மற்றும் ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

கம்பஹா மற்றும் மினுவாங்கொடை கல்வி வலயங்களில் இருந்து இந்த திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கமைய இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கம்பஹா மற்றும் மினுவாங்கொடை வலயங்களில் உள்ள அத்தகைய பாடசாலைகளின் பட்டியலை உடனடியாக வலயக் கல்வி அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தினார். கம்பஹா மாவட்டச் செயலகத்தில் இன்று (11) நடைபெற்ற கம்பஹா கல்விக் கட்டமைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரண துங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இவ்வாறான பாடசாலைகளை இனங்கண்டு, அடுத்த வருட ஆரம்பத்துக்குள், முன்னுரிமை அடிப்படையில் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் கம்பஹா கல்வி கோட்டத்தில் உள்ள 21 பாடசாலைகளுக்காக உருவாக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்தப் பாடசாலை அபிவிருத்தித் திட்டங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பட்டயப் பொறியாளர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி அதிகார சபையால் மினுவாங்கொடை கல்விப் பிரிவிலுள்ள 35 பாடசாலைகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களை தயாரிக்கப்பட்டுள்ளன.

# கல்முனை மாணவிகள் கௌரவிப்பு



(எம்.எம்.ஜெஸ்மின்)

தேசிய, மாகாண, வலயமட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற கல்முனை மாணவிகள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய மட்ட சமூக விஞ்ஞான வினா விடை போட்டி, மாகாண மட்ட மனையியல் பொருளியல் வினாடி வினா போட்டி, ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டி, இலங்கை பாடசாலைகள் சதுரங்க அணி போட்டி, விஞ்ஞான வினாடி வினா போட்டி, வலய மட்ட இரண்டாம் தேசிய மொழி சிங்கள மதிப்பீட்டு போட்டிகளில் கலந்து கொண்டு திறமைகளை வெளிப்படுத்திய மாணவிகளே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர். கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் சாதனை மாணவிகள் பாடசாலை முன்றலில் பூ மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். வெற்றி பதக்கங்கள், நினைவு சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அதிபர், பிரதி, உதவி அதிபர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், பொறுப்பாசிரியர்கள் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டனர்.

மாகாண மட்ட சதுரங்க போட்டியில் 17 வயதுக்கு உட்பட்ட நிகழ்ச்சியில் மஹ்மூத் மாணவிகள் சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



# தரம் 5 மாணவரைக் கௌரவித்த இணைந்த கரங்கள் அமைப்பினர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை, மூதூர், முன்னம் போடி வெட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் புலமையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இணைந்த கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் அதிபர் திருமதி. பு. ஜெகப்பிரபன் தலைமையில் இடம்பெற்றது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்தும் நிகழ்வில் அதிதிகளாக ஆரம்ப கல்விக்கு பொறுப்பாக இருக்கும் முதூர் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம், முதூர் கல்வி வலய கோட்டக் கல்வி அதிகாரி ஏ. பி.ஏ.ஜப்பார், ஆசிரிய ஆலோசகர் எஸ்.எம்.நௌபர், பாடசாலையின் முன்னாள் அதிபர் மா.இளங்கோ, சமூக சேவையாளர் திருமதி. ம. மிராஜீ, ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர், பொது அமைப்புக்கள் இணைந்த கரங்கள் அமைப்பின்



உறுப்பினர்களான லோ. கஜரூபன், எஸ். காந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு நினைவுச் சின்னம், பதக்கங்கள் மற்றும் பாதணிகள் வழங்கப்பட்டன.

# கல்முனை பிராந்தியத்துக்கு புதிய சுகாதாரப் பணிப்பாளர்

(அபு அலா )

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸதீன் தனது கடமைகளை இன்று (11) பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமைற்றி வந்த வைத்தியர் ஐ.எல். எம்.றிபாஸ் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று இடமாற்றலாகிச் சென்றுள்ளார்.

இந்த வெற்றிடத்துக்குப் பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக செயற்பட்டு வந்த வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸதீனுக்கு பணிப்பாளர் பதவியுயர்வு வழங்கப்பட்டு இன்று அவர் கடமையேற்றார்.





# இந்து அறநெறி மாணவருக்கு ஆக்கத்திறன் விருது வழங்கல்!

அம்பாறை மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது வழங்கல் விழா அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் தலைமையில் காரைதீவு சுவாமி விபுலானந்தா ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

திருமுன்னிலை அதிதியாக மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜி மகராஜ் கலந்து கொண்டு ஆசீர்வாதம் வழங்கினார்.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.எம். ஹனீபா, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் ஷாபிர் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக திருக்கோவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சோ. ஸ்ரநுதன், சம்மாந்துறை உதவி கல்விப் பணிப்பாளர்களான பூ. பரமதயாளன், வி.ரி. சகாதேவராஜா, ஆசிரியர் சி. சிவராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜ் விழா ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.





# திருத்தப்படாத வாய்க்கால் விசாயிகள் பெரும் சிரமத்தில்!

**( அஸ்ஹர் இப்றாஹிம்)**

சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன திணைக்களப் பாலையடிப் போட்டா வடிச்சல் வாய்க்கால் பல வருடங்களாக சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவுக்கு உட்பட்ட பாலயடி போட்டா, தொய்யம் வட்டை கீழ்க்கண்டம் மற்றும் மேற்கண்டம் ஆகிய சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலங்களில் இருந்து வெளியேற்றப்படும் வடிச்சல் நீர் கிறவல் ஆற்றில் சேருமிடத்திலுள்ள வாய்க்காலே இவ்வாறு சேதமடைந்து உள்ளது. பல வருடங்களாகியும் இன்னும் திருத்தப்படாத நிலையிலேயே காணப்படுகிறது என்று பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வாய்க்கால் சேதமடைந்துள்ளதால் இதன் மேலாகப் போடப்பட்டிருந்த கொங்கிறீட் பாலமும் இடிந்து விழுந்துள்ளது. இதனால் ஏனைய வயல்களுக்குச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் வாய்க்கால் ஆழமாகவுள்ளதால் இருபுறமும் உள்ள வயல் நிலங்கள் ஒவ்வொரு போகத்தின் போதும் இடிந்து விழுகிறது.



இதனால் விவசாயிகள் பல விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வட்ட விதானைகள் ஊடாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பலமுறை தெரிவித்தும் இதுவரை இவ்வாய்க்கால் திருத்த வேலைகள் இடம் பெறாமல் இருப்பது மிகவும் கவலையளிக்கிறது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

# கற்பிட்டி சின்னக்குடியிருப்பு மக்களுக்குத் தீர்வு எப்போது?

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி சின்னக்குடியிருப்பு பகுதி ஒவ்வொரு மழைக் காலங்களிலும் மழை நீர் பாதிப்புக்கு உள்ளாக்கி வருவது வழமையான ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.

இதற்கான சரியான வடிகால் அமைப்பு மேற்கொள்ளப்படாமையே பிரதான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மழை வெள்ளத்தின் போதும் கற்பிட்டி பிரதேச சபை, கற்பிட்டி பிரதேச செயலகங்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் கற்பிட்டி சின்னக் குடியிருப்பு மக்கள் தமது முறைப்பாடுகளை தெரிப்பதும் மழைக்காலம் முடிந்தவுடன் முறைப்பாடுகள் கிடப்பில் போடப்படுவதுமாகவே காணப்படுகின்றது.



இந்த முறையும் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் கற்பிட்டி அமைப்பாளர் யூ.எம். ஜின்னாவின் வேண்டுகோளுக்கு இனங்க புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மனிதாபிமான செயற்பாடுகளாக வெள்ளம் வழிந்தோட வழியமைத்தார்.

பாதையின் இரு மருங்கிலும் பெகோ இயந்திரம் கொண்டு வடிகால் தோண்டப்பட்டு மழை நீரைக் கடலுக்குப் பாய்ச்சும் வேலைத்திட்டம் இடம்பெற்றது.

இந்த மனிதாபிமான வேலைத் திட்டத்தின் மூலம் தற்போது தேங்கி நிற்கும் மழை நீர் கடலுக்குச் சென்று விடும். எனினும் அடுத்த மழை வெள்ளம் எமது வீடுகளுக்குள் நுழையாத வண்ணம் எமக்கான நிரந்தர தீர்வு எப்போது கிடைக்கும் என்ற கேள்வியுடன் கற்பிட்டி சின்னக்குடியிருப்பு மக்கள் உள்ளனர்.

உரிய அதிகாரிகள் இதற்பான நிரந்தரத் தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.

# கல்முனையில் மூத்த ஆலிம்கள் கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர் )

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேசத்தில் உள்ள மூத்த ஆலிம்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளை அலுவலகத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் அஷ்-ஷெய்க் அல்-ஆலிம் அல்-முப்தி ஏ.எல். எம். முர்ஷித் தலைமையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை அலுவலகத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வெலிகம பாரி அரபுக் கல்லூரி அதிபர் அஷ்-ஷெய்க் அல்-ஆலிம் ஏ.ஆர். அப்துர் ரஹ்மான் கலந்து கொண்டார். இதன் போது நீண்ட காலமாக ஆலிம்களாக கடமையாற்றிய மூத்த ஆலிம்களான, அஷ்ஷெய்க்.எம்.எல். முஹம்மத் சுல்தான் (கபூரி), அஷ்-ஷெய்க் இஸட் முஹம்மத் நதீர் (ஷர்க்கி), அஷ்-ஷெய்க் எம்.ஐ.முஹம்மத் ரபீக், அஷ்-ஷெய்க் எஸ்.எம்.முஹம்மத் ஆரிப் (நத்வி), அஷ்-ஷெய்க் எம்.எம். உதுமாலெப்பை (நூரி), அஷ்-ஷெய்க் யூ.எல். சாகுல் ஹமீத் (ஹாமி), அஷ்-ஷெய்க் ஏ.எம்.முபாறக் அப்துல் மஜீட் (கபூரி, மதனி), அஷ்-ஷெய்க் யூ.எல். எம். இக்பால் (ஹாமி), அஷ்ஷெய்க் எஸ்.எச். குதுபுத்தீன் (ஹாமி), அஷ்-ஷெய்க் கே.எம்.ஹாறூன் (சலபி), அஷ்-ஷெய்க்.பி.எம்.நிஸாம் (ஹாஷிமி), அஷ்-ஷெய்க் எம்.சி. அப்துஸ் ஸமட் (தப்லீகி), அஷ்-ஷெய்க்.ரி. ரிபானுத்தீன் (பலாஹி), அஷ்-ஷெய்க்.ஐ.எல்.வலியுல்லாஹ் (ஹாமி), அஷ்-ஷெய்க்.ஐ.எல்.நசீர் அஹமட் (நிழாமி) ஆகியோர் நினைவு சின்னம் வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

# ஜம்மு - காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து செல்லும்: தேர்தலை நடத்த வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பு




ஜம்மு – காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்த சட்டப்பிரிவு 370 ரத்து செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும், அங்கு எதிர்வரும் 2024 செப்டெம்பருக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

ஜம்மு – காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து அளித்த சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த 5 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு இன்று தனது தீர்ப்பை வழங்கியது.

தீர்ப்பை வாசிப்பதற்கு முன்பாக, இந்த வழக்கில் 3 விதமான தீர்ப்பு உள்ளதாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அவர் தீர்ப்பை வாசித்தார். அதில் அவர் குறிப்பிடுகையில்,

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் சட்டப்பிரிவு 370 தற்காலிகமானதே. சட்டப்பிரிவு 1 மற்றும் 370ன் படி ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. சட்டப்பிரிவு 370 ஏற்படுத்தப்பட்டது ஒரு இடைக்கால ஏற்பாடு. சட்டப்பிரிவு 370ஐ ரத்து செய்வதற்கு இந்திய குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது. ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த பிறகு அது தனித்த இறையாண்மையைக் கொண்டிருக்கவில்லை.

ஜம்மு காஷ்மீரை இந்தியாவுடன் ஒருங்கிணைக்கவே சட்டப்பிரிவு 370 இருந்தது. இந்தியாவில் இருந்து அதனை பிரிப்பதற்காக அல்ல. சட்டப்பிரிவு 370ஐ ரத்து செய்வதற்கான அறிவிப்பை வெளியிடும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு. இதற்காக அவர் சட்டப்பிரிவு 370(3)ஐ பயன்படுத்தியதில் தவறு இல்லை. குடியரசுத் தலைவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியது செல்லுபடியாகும்.

சட்டப்பிரிவு 370(1)(d) இன்படி அரசியலமைப்பின் அனைத்து விதிகளையும் ஜம்மு காஷ்மீருக்குப் பயன்படுத்தலாம். ஜம்மு காஷ்மீருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்ய மாநில அரசின் ஒப்புதலைப் பெறத் தேவையில்லை. சிறப்பு அந்தஸ்து ரத்து செல்லும்.

ஜம்மு காஷ்மீரை இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்க மத்திய அரசுக்கு உரிமை உள்ளது. மாநிலம் தொடர்பாக மத்திய அரசு எடுக்கும் முடிவுகளை ரத்து செய்யக் கோர முடியாது. இதில் தலையிடுவது, குழப் பத்தையும் நிச்சயமற்ற நிலையை யுமே ஏற்படுத்தும். மேலும், நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைக்கும். அந்த வகையில், லடாக்கை யூனியன் பிரதேசமாக அறிவித்தது செல்லும்.

அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதிக்குள் இந்திய தேர்தல் ஆணையம் ஜம்மு காஷ்மீர் சட்டப் பேரவைக்குத் தேர்தல் நடத்த வேண்டும். ஜம்மு காஷ்மீர் மறு சீரமைப்பு தொடர்பான மத்திய அரசின் அறிக்கையின்படி, விரைவில் ஜம்மு காஷ்மீருக்கு மத்திய அரசு மாநில அந்தஸ்து அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக தீர்ப்பு வெளியாவதை ஒட்டி ஜம்மு காஷ்மீரில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதன் ஒரு பகுதியாக முன்னாள் முதல்வரும் பி.டி.பி. கட்சியின் தலைவருமான மெஹபூபா முஃப்தி, தேசிய மாநாட்டுக் கட்சியின் முக்கியத் தலைவரும், முன்னாள் முதல்வர் ஒமர் அப்துல்லா ஆகியோர் தாங்கள் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டனர் என்று கூறினார். ஆனால், இதனை அரசுத் தரப்பு மறுத்தது குறிப்பிடத்தக்கது.

# மழை, வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்ய மத்திய குழு இன்று சென்னைக்குப் பயணம்



சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் மழை வெள்ளப்பாதிப்பு குறித்து ஆய்வு செய்வதற்காக மத்திய குழு இன்று சென்னைக்கு பயணம் மேற்கொள்கின்றது.

'மிக்ஜாம்' புயல் மழை வெள்ளத்தால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. கடந்த 7 ஆம் திகதி சென்னை வந்தமத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ஆலோசனை நடத்தினார். இதைத் தொடர்ந்து மத்தியதொழில் முனைவோர் மற்றும் நீர்வளத் துறை இணையமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் சென்னைக்கு நேற்று முன்தினம் சென்றார். மழை வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட காஞ்சிபுரம் மாவட்டத்தின் வரதராஜபுரம், செங்கல்பட்டு மாவட்டத்தின் முடிச்சூர் ஆகிய பகுதிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த நிலையில், மழை வெள்ளப் பாதிப்புகளை ஆய்வுசெய்வதற்காக மத்திய குழு இன்று மாலை சென்னைக்கு செல்கின்றது. அவர்கள் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் 2 நாள் சுற்றுப்பயணம் செய்து பாதிப்புகளை ஆய்வுசெய்ய உள்ளனர்.

# எந்தவொரு பணயக் கைதியும் உயிருடன் திரும்ப மாட்டார்கள்

## ஹமாஸ் எச்சரிக்கை

தெற்கு காசாவின் முக்கிய நகரத்தை இஸ்ரேல் குண்டுவீசித் தாக்கியிருக்கும் நிலையில், எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாதவரை எந்தவொரு பிணைக்கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள் என ஹமாஸ் எச்சரித்துள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை காசா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், கடந்த மாதம் தற்காலிக போர் நிறுத்தத்தின் போது 80 இஸ்ரேல் பணயக் கைதிகளுக்கு இணையாக 240 பாலஸ்தீனக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும், தெற்கு காசாவின் முக்கிய நகரத்தை இஸ்ரேல் குண்டுவீசித் தாக்கியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தற்போது இஸ்ரேல் படையினர் நடத்தி வரும் கொடூரத் தாக்குதலுக்கு ஹமாஸ் அமைப்பினரும் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

ஹமாஸிடம் இன்னும் பலர் பணயக் கைதிகளாக உள்ளனர். அவர்களை மீட்க இஸ்ரேல் படையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஆனால் எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாத வரை எந்தவொரு பிணைக்கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள் என ஹமாஸின் ஆயுதப்பிரிவின் செய்தி தொடர்பாளர் அபு ஒபையா எச்சரிக்கை



விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "இஸ்ரேலிய படையுடன் தொடர்ந்து யுத்தம் நடத்துவோம். ஒவ்வொரு தெருவிலும், பகுதியிலும், காட்டுமிராண்டி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சண்டை போடுவதைத் தவிர வேறு வழியில்லை. எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாத வரை எந்தவொரு பிணைக்கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள்.

அத்தோடு, எதிரிகள் எங்களுடைய எதிர்க்கும் தன்மையை உடைப்பதையே முக்கிய நோக்கமாக கொண்டுள்ளனர். ஆனால் நாங்கள் எங்கள் மண்ணில் புனிதமான முறையில் போராடுகிறோம்" என்றார்.

இதற்கிடையே காசாவில் புதிய போர் நிறுத்தத்தைக் கொண்டு வரவும், பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான முயற்சியிலும் கட்டார் ஈடுபட்டு வருகிறது. ஆனால் இஸ்ரேல் தெற்கு காசா பகுதிகளை குறிவைத்து பயங்கர தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேல், காஸா மீது தொடர் தாக்குதல்களை நடத்தி 17 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களைக் கொன்றுள்ளதாக கூறப்படுகிறது.

# அர்ஜென்டினா ஜனாதிபதியாக பதவியேற்றார் ஜேவியர் மிலி!

அர்ஜென்டினாவின் ஜனாதிபதியாக பொருளாதார நிபுணரான ஜேவியர் மிலி பதவியேற்றுள்ளார்.

அர்ஜென்டினா கடுமையான பொருளாதாரா நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது.

இந்த நிலையில், அங்கு நடந்த தேர்தலில் ஜேவியர் அபார வெற்றி பெற்றுள்ளார்.

பதவியேற்புக்குப் பின்னர் பேசிய ஜனாதிபதி ஜேவியர் மிலி கூறுகையில், "இறைவன் மீதும், என் தேசத்தின் மீதும் ஆணையாக நான் இந்த ஜனாதிபதி பதவியில் உண்மையுடன், தேசபக்தியுடன் செயல்படுவேன். முந்தைய ஆட்சியாளர்கள் கஜானாவை காலிசெய்துவிட்டுச் சென்றுள்ளனர். அவர்களின் நடவடிக்கையால் நாடு அதிதீவிர பணவீக்கத்தை சந்தித்துள்ளது.



அரசாங்கத்திடம் பணம் இல்லை. நிதி சீர்திருத்தம் தான் இப்போதைய தேவை. ஆனால் அதன் பலன்கள் அரசாங்கத்துக்கு வர வேண்டும். தனியார் துறைகள் ஆதாயமடையும் வகையில் இருக்கும்படியான சீர்திருத்தங்களாக இருந்துவிடக் கூடாது" என்றார்.

அர்ஜென்டினாவின் பணவீக்கம் மூன்று இலக்கத்தில் உள்ளது. அங்கு தற்போது 40 சதவீத மக்கள் வறுமையில் உள்ளனர். 1.8 கோடி பேர் தங்களின் தனிப்பட்ட தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளனர். 10 சதவீத மக்கள் உணவுக்குக்கூட வழியிலாது மோசமான வறுமையில் உள்ளனர்.

அந்த நாட்டில் வேலைவாய்ப்பின்மை 6.2 சதவீதமாக உள்ளது. கடுமையான பணவீக்கம், நாணய மதிப்பு சரிவு என அர்ஜென்டினா கடுமையான நிதிச்சுழலில் சிக்கியுள்ள நிலையில், ஜேவியரின் பதவியேற்பு அந்த நாட்டு மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜேவியருக்கும் கடுமையான சவால்கள் காத்திருக்கின்றன.



# ஜனாதிபதியின் சுற்றாடல் விருது நிகழ்வில் மூன்று வர்ணப் பதக்கம் பெற்ற மாணவி!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மத்திய சுற்றாடல் அதிகார சபை அம்பாறை மாவட்ட அலுவலகத்தால் பாடசாலைகளில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு வருகின்ற சுற்றாடல் முன்னோடிக் கழக மாணவர்களின் மாகாண மட்ட பதக்க பரீட்சிப்பான தங்க வர்ண பரீட்சிப்பு நிகழ்வுகள் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் சுற்றாடல் முன்னோடி கழகத்தின் தலைவர் ஆசிரியை எம்.ஜ. ஜ“வைரியா தலைமையில் சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை), அல்-மிஸ்பா மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை சிவசத்தி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் சுற்றாடல் கழக மாணவர்கள் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வின் பரீட்சிப்பாளர்களாக அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட சுற்றாடல் அதிகாரி எம்.ஜ.எம். இஸ்ஸாக், கல்முனை சுற்றாடல் வலயத்தின் ஆணையாளரும் ஆசிரிய ஆலோசகருமான ஏ. றசீக், உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். முதர்ரிஸ் மற்றும் கல்முனை வலயத்தின் சுற்றாடல் கல்வி பொறுப்பதிகாரி திருமதி. பி. செவ்வேள் குமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பரீட்சிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி தரம் 11 இல் இரு மொழி பிரிவில் கல்வி பயிலும் மாணவி எஸ். பாத்திமா ஸஹ்ராவுக்கு மஞ்சள், பச்சை, வெள்ளி வர்ண பதக்கங்கள் கிடைக்கப் பெற்றன.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதக்க விருது போட்டி நிகழ்ச்சிகளுக்காக இந்த மாணவிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கற்பிட்டி மாணவர் திறன் வெளிப்பாடு

**(எம்.எச்.எம் சியாஜ்)**

கற்பிட்டி அஹதிய்யா பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் திறன்களையும் இஸ்லாமிய விழுமியங்களையும் வெளிக்கொணரும் நோக்கோடு வாராந்தம் நடைபெறும் காலைக்கூட்டத்தின் போது ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் திறன்களை வெளிக் கொண்டு வருவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது என்று கற்பிட்டி அஹதிய்யா பாடசாலையின் அதிபர் எம்.ஐ. நிஹாரா தெரிவித்தார்.

அந்த வரிசையில் தரம் 08 இல் கல்வி பயிலும் மாணவர்கள் திறமைகளும் ஆற்றல்களும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் வெளிக்காட்டியதாகவும் இதன் போது எம்.எஸ்.எப் ஸபீஹா வால் வழங்கப்பட்ட சிந்தனைத் துளிகள் பலரையும் சிந்திக்க வைக்கும் வண்ணம் சிறப்பாக இருந்ததாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.





